## (ஈ) பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1995

*மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு வணிக வரிகள் துறை அமைச்சர்.*

** மாண்புமிகு தி. ந. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.*

*"1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"*
*எனக் கோருகிறேன்.*

*மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரிகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.*

*மாண்புமிகு வணிக வரிகள் துறை அமைச்சர்.*

*மாண்புமிகு தி. ந. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

## (உ) ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1995

*மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.*

*மாண்புமிகு தி. ந. டி.எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.*

1995 நவம்பர் 7] [திரு. டி.எம். செல்வகணபதி]

"1995-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்,

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

*மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்

(முற்பகல் 11-50

## 7. முதல் துணை நிதிநிலை அறிக்கை, 1994-95

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* 1995-96 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை நிதிநிலை அறிக்கை மீது மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் உரை. (குறுக்கீடு)

*திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் துணை நிதிநிலை அறிக்கையினை வைப்பதற்கு ஆளுநர் அவர்கள் அனுமதி அளித்திருக்கிறார்கள். நீங்கள் படிக்காவிட்டாலும் அனுமதித்ததாகத்தான் நான் எடுத்துக் கொள்வேன். நேற்றையதினம் துணை நிதிநிலை அறிக்கை பேரவையிலே தாக்கல் செய்யப்பட்டிருக்க வேண்டும். நேற்றையதினம் பேரவை ஒத்திவைக்கப்பட்ட காரணத்தாலே நேற்றையதினம் தாக்கல் செய்யப்படவில்லை. அறிக்கை இன்றைய தினம் தாக்கல் செய்யப்பட இருக்கிறது... (குறுக்கீடு)

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* நான் ஒன்று சொல்லிவிடுகிறேன் (குறுக்கீடு). என்னுடைய அறையிலேயே நீங்கள் தெரிவித்தீர்கள். (குறுக்கீடு)